## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>preliminary Register<br>Sessions | :<br>:<br>:<br>: | CC. No.115/2019 |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.1 |
| Name : | | சாந்தி |
| Father's/Husband Name: | | ரெங்கநாதன் |
| Village : | | ஏர்வாடி |
| Taluk : | | கீழக்கரை |
| Age : | | 40/2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 15.09.2022

**முதல் விசாரணை :–**

**01.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஆடு மோய்க்கும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 17.08.2017 ம் தேதி பெருநிலா முருகேசன் என்பவர் காட்டுக்கொட்டகையில் பகல் 1.00 மணிக்கு சமைத்து கொண்டு இருந்தேன்.

02. அப்போது ஆஜர் எதிரிகள் அங்கு வந்து குடிக்க தண்ணீர் கேட்டார்கள். நான் தண்ணீர் எடுக்க சென்றபோது ஆஜர் 1ம் எதிரி பைக்கில் நின்று கொண்டு இருந்தார், ஆஜர் 2ம் எதிரி உள்ளே வந்து கதவை சாத்தி என் கழுத்தில் கத்தி வைத்து என் கழுத்தில் அணிதிருந்த தாலி செயினை இழுத்தார்கள்.

03. நான் பயந்து கொண்டு நான் ஒரு கையால் கழட்டினேன். ஆஜர் 2ம் எதிரி அந்த செயினை என்னிடம் இருந்து பறித்து கொண்டு ஓடிவிட்டார். அங்கு இருப்பதற்கு பயந்து கொண்டு அன்றே எங்கள் சொந்த ஊருக்கு சென்றுவிட்டோம்.

04. எங்கள் ஊர்காரர்கள் நீங்கள் இருந்த இடத்தில் சென்று புகார் கொடுங்கள் என்று சொன்னாரகள். அதன் பிறகு வந்து கை.களத்தூர் காவல் நிலையத்தில் வந்து புகார் கொடுத்தோம்.

05. சுமார் ஒரு வருடம் கழித்து போலீசார் நகையை கண்டுபிடித்து கொடுத்தார்கள்.

நீதிமன்றத்தில் மனு செய்து இடைகால பொறுப்பில் என் நகையை பெற்று சென்றேன். அதை தற்போது பேங்கில் அடகு வைத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் அளித்ததுதான்.

06. அதில் உள்ள கையொப்பம் நான் அளித்ததுதான். **(அந்த புகார்அ.சா.ஆ.1 ஆகும்)** தற்போது என்னிடம் காட்டப்படும் CDயுடன் கூடிய புகைப்படத்தில் உள்ள செயின் என்னுடையதுதான். நீதிமன்றத்தில் நான் பெற்று சென்ற நகைதான். ( **CDயுடன் கூடிய புகைப்படம் அ.சா.பொ.1 ஆகும்**.) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

01. போலிசார் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகாரில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை தற்போது சொல்லமுடியுமா என்றால் செயினை அறுத்து சென்றுவிட்டார்கள் என்றுதான் சொல்லியுள்ளேன்.

02. பைக் என்ன கலர் என்று புகார் மற்றும் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் எதிரிகள் என்ன கலர் என்ன வகையான ஆடை என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

03. போலீசார் இரண்டு, முன்று முறை விசாரணை செய்து கையால் எழுதி சென்றார்கள் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் படித்து காண்பித்து கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான். போலீசார் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான்.

04. சிறைக்கு அழைத்து சென்று அடையாள அணிவகுப்பு நடத்தினார்களா என்றால் நடத்தினார்கள். எத்தனை வரிசையில் எத்தனையாவது ஆளாக நின்றார்கள் என்றால் வரிசையாக நிற்க வைத்திருந்தாரகள். இதை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை.

05. மோப்ப நாய் அழைத்து வந்த சம்பவ இடத்தில் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. ஆஜர் எதிரிகளின் பெயர், ஊர் போலீசார் சொன்னார்களா என்றால் சொல்லவில்லை. சம்பவம் நடந்தது 17.8.2017. புகார் அளித்த தேதி என்ன என்றால் ஞாபகம் இல்லை.

06. புகாரை நான் 09.09.2017 அன்று கொடுத்தேன் என்றால் இருக்கலாம்.

தாமதத்திற்கான காரணத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். அவர்கள் எடுத்துக்கொள்ளவில்லை. கை.களத்தூர் காவல் நிலையத்திற்கு சென்று நகைகளை அடையாளம் காட்டினேனா என்றால் காட்டினேன். 07. நகை கிடைத்ததாக கை.களத்தூர் போலீசார் சொன்னார்கள் என்றால் சரிதான். திருச்சி சிறைக்கு அழைத்து சென்ற தேதி, மாதம் என்னால் சொல்லமுடியுமா என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரிகள் எதுவும் செய்யவில்லை என்றாலும் போலீசார் கேட்டு கொண்டதற்கான பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>preliminary Register<br>Sessions | :<br>:<br>:<br>: | CC. No.115/2019 |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.2 |
| Name : | | **ரெங்கநாதன்** |
| Father's/Husband Name: | | குருசாமி |
| Village : | | ஏர்வாடி |
| Taluk : | | கீழக்கரை |
| Age : | | 47/2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 15.09.2022

**முதல் விசாரணை :-**

**01.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஆடு மேய்க்கும் தொழில் செய்கிறேன். அ.சா.1 எனது மனைவி. 2017 வருடம் தேதி, மாதம் ஞாபகம் இல்லை பகல் சுமார் 1.30 மணிக்கு எனது வீட்டுகாரர் போன் செய்து இரண்டு ஆண் நபர்கள் வீட்டு வந்து தண்ணீர் கேட்டார்கள்.

02. தண்ணீர் எடுக்க உள்ளே சென்றபோது கத்தியை காட்டி அவர் கழுத்தில் அணிந்திருந்த 5 சவரண் நகைகளை பறித்து சென்றுவிட்டதாக சொன்னார். சம்பவத்திற்கு மறுநாள் காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்தோம். போலீசார் எங்களை விசாரித்தார்கள்.

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

01. போலிசார் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த தேதி, மாதம் குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

02. சம்பவம் நடந்த அடுத்த நாளில் தான் என் மனைவி அ.சா.1 புகார் கொடுத்தார் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று நான் ஆடு ஓட்டி சென்றுவிட்டேன்

என்றால் சரிதான். என் மனைவி என்னிடம் செல்போன் மூலம் தகவல் அளித்தார் என்றால் சரிதான்.

03. போலீசார் விசாரணையில் என்னுடைய செல்போன் நம்பரையும் என்னுடைய மனைவியின் செல்போன் நம்பரை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என் மனைவியை தவிர வேறு யாரும் சம்பவத்தை பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>preliminary Register<br>Sessions | :<br>:<br>:<br>: | CC. No.115/2019 |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.3 |
| Name : | | **முருகேசன்** |
| Father's/Husband Name: | | **கோவிந்தசாமி** |
| Village : | | **பாதாங்கி** |
| Taluk : | | **வேப்பந்தட்டை** |
| Age : | | 53/2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 15.09.2022

**முதல் விசாரணை :–**

**01.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது காட்டில் ஆட்டு கிடை போட்டு இருந்தார்கள். 17.08.2017 ம் தேதி அ.சா.1 மட்டும் எங்கள் காட்டு கொட்டகையில் தங்கி இருந்தார்.

02. அன்று பகல் 1 மணிக்கு என் பக்கத்து காட்டுகாரர் கருப்பையா போன்செய்து அ.சா.1ன் செயினை யாரோ அறுத்துகொண்டு சென்றுவிட்டார்கள் என்று சொன்னார். உடனே நான் புறப்பட்டு காட்டுக்கு சென்றேன்.

03. அங்கு அ.சா.1 என்னிடம் இரண்டு பேர் நின்று கொண்டு இருந்ததாகவும் ஏன் நிற்கீர்கள் என்று கேட்டபோது ஏதோ லோன் விசயமாக வந்ததாகவும் தன்னிடம் தண்ணீர் கேட்டதாகவும் தான் தண்ணீர் எடுக்க குடிசைக்குள் சென்றபோது ஒருவன் உள்ளே சென்று கழுத்தை பிடித்த போது அவர் என்னை கொன்றுவிடாதே செயினை கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லி செயினை கொடுத்ததாக சொன்னார்.

03. அதன் பிறகு காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். போலீசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்கள்.

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

01. போலிசார் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்றே புகார் அளித்தார்கள் என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

02. சம்பவம் நடந்த அன்று நான் பெரம்பலூரில் இருந்தேன் என்றால் சரிதான். எனக்கு செல்போன் மூலம் தகவல் வந்தது என்றால் சரிதான்.

03. போலீசார் விசாரணையில் என்னுடைய செல்போன் நம்பரையும் கருப்பயை செல்போன் நம்பரை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்து கையால் எழுதி சென்றார்களா என்றால் சரிதான். போலீசார் என்னை இரண்டு, மூன்று முறை விசாரணை செய்தார்களா என்றால் சரிதான்.

04. காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்களா என்றால் சரிதான். பைக் என்ன கலர் என்று சொன்னார்களா என்றால் இல்லை. செயினை அறுத்தவர்கள் என்ன உடை அணிந்திருந்தார்கள் அவர்கள் எப்படி இருந்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | CC. No.115/2019 |
| Miscellaneous | : | |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.4 |
| Name : | | மணியரசு |
| Father's/Husband Name: | | பிச்சைபிள்ளை |
| Village : | | சித்தளி |
| Taluk : | | குன்னம் |
| Age : | | 48/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 15.09.2022

**முதல் விசாரணை :–**

**01.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் உள்ள கையெப்பங்கள் என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :–**

01. 12.09.2017 ம் தேதி காலை 11.45 மணிக்கு நான் எங்கு இருந்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் எதிரி ராஜேஸ் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. எதிரி ராஜேஸ் போலீசாரிடம் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

02. அதே தேதியில் எதிரி ராஜேஸ் தான் திருடியதாக செயினை எடுத்து போலீசாரிடம் ஒப்படைத்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரங்கள் அனைத்தும் தெரிந்து போலீஸ் விசாரணையில் சாட்சியாக இருந்து

கையொப்பம் போட்டுவிட்டு தற்போது எதிரியை காப்பற்ற வேண்டி பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

01. 1,2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை இல்லை என்று பிரதிநிதிதுவம் செய்ததை பதிவு செய்யப்பட்டது.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>preliminary Register<br>Sessions | :<br>:<br>:<br>: | CC. No.115/2019 |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.5 |
| Name : | | **தாமரைச்செல்வன்** |
| Father's/Husband Name: | | ராதா |
| Village : | | சித்தளி |
| Taluk : | | குன்னம் |
| Age : | | 43/2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 15.09.2022

**முதல் விசாரணை :–**

**01.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் எலக்டிரேஷன் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது.ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் உள்ள கையெப்பங்கள் என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :–**

01. 12.09.2017 ம் தேதி காலை 11.45 மணிக்கு நான் எங்கு இருந்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் எதிரி ராஜேஸ் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது.

02. எதிரி ராஜேஸ் போலீசாரிடம் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. அதே தேதியில் எதிரி ராஜேஸ் தான் திருடியதாக செயினை எடுத்து போலீசாரிடம் ஒப்படைத்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரங்கள் அனைத்தும் தெரிந்து போலீஸ் விசாரணையில் சாட்சியாக இருந்து கையொப்பம் போட்டுவிட்டு தற்போது எதிரியை காப்பற்ற வேண்டி பொய்சாட்சி

அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

01. 1,2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை இல்லை என்று பிரதிநிதிதுவம் செய்ததை பதிவு செய்யப்பட்டது.